# இணையதளத்தில் வெளியிடப்படும் விளம்பரம்

**அறிவிக்கை எண் : டிட்கோ/ம.வ/2025-6** **நாள்: 30.12.2025**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), சென்னை அலுவலகத்தில் காலியாக உள்ள 2 (இரண்டு) அலுவலக உதவியாளர் நிரந்தர பணியிடங்களை நிரப்புவதற்காக தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) அலுவலகம் மற்றும் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

காலியாக உள்ள பணியிடங்களுக்கான விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | வகுப்புவாரி ஒதுக்கிடு விவரம் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | நிலை – 1 (ரூ.15700 – 58100/-) | 1. பொது (முன்னுரிமை) | 1 |
| | | | 2. ஆதிதிராவிடர் (அருந்ததியர்) – தமிழ்வழி கல்வி / ஆதரவற்ற விதவை / பெண்கள் | 1 |

2. தகுதிகள் :-

A. வயது வரம்பு (01.07.2025 அன்று):-

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | வகுப்புவாரி ஒதுக்கிடு விவரம் |
|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவு | 18 | 32 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் | 18 | 34 |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் | 18 | 34 |
| 4. | ஆதிதிராவிடர் | 18 | 37 |
| 5. | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | 18 | 37 |
| 6. | பழங்குடியின வகுப்பினர் | 18 | 37 |

குறிப்பு:

அரசாணை (நிலை) எண் 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.03.2021 இன்படி அரசுப் பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணி நியாளம் செய்யப்படுவதற்கான வலது உச்ச வரம்பு மேலும் 2 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது.
வயது வரம்புச் சலுகை:

- முன்னாள் இராணுவத்தினர் (01.07.2025 அன்று)
    - பொதுப்பிரிவினர் அதிகபட்சம் – 50 வயது
    - இதரப்பிரிவினருக்கு அதிகபட்சம் – 55 வயது
- மாற்றுத் திறனாளிகள்

  மாற்றுத் திறனாளிகள் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவர்கள். ஆனால் அவர் தேர்வு செய்யப்பட்டுள்ள பதவியினை திறமையுடன் செய்து முடிப்பதற்கு அவருடைய குறைபாடு தடையாக இல்லாமல் இருக்கிறதென்றால் தகுதியுடையவராவார். (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு –64)

B. கல்வித் தகுதி (01.07.2025 அன்று):–

01.07.2025–ஆம் தேதி அன்று விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. குறைந்தபட்ச கல்வித்தகுதி : 8–ஆம் வகுப்பு தேர்ச்சி
2. தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும்

C. இதர தகுதிகள்:–

- மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்
- பணி நியமனம் செய்யப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும் முன்வரலாறும் அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருக்க வேண்டும்
- இருதாரமணம்:
    - ஆண் விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது
    - விண்ணப்பதாரர் பெண்ணாக இருப்பின், ஏற்கனவே மனைவியுடன்

வாழும் ஒருவரைத் திருமணம் செய்தவராக இருத்தல் கூடாது

D. முன்னுரிமை :–

1.(அ)கொரோனா தொற்றினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) நேர்வில் கோவிட் 19 இறப்பு உறுதிப்படுத்தும் குழுத்தலைவரால் ஒப்பமிடப்பட்ட கோவிட் இறப்பிற்கான அலுவலர் ஆவணச் சான்றிதழ் அடிப்படையில் முன்னுரிமை பெறத் தகுதியுடையவராவார்கள்.

(ஆ) இதர காரணங்களினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்)

(இ) தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும் தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள் அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும்,

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபர்கள் வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் "தாய் தந்தையற்றோர்" சான்றிதழ் அடிப்படையிலும் முன்னுரிமை பெற தகுதியுடையவர்களாவார்.

2. முதல் தலைமுறை பட்டதாரி சான்றின் அடிப்படையில் முன்னுரிமை கோருவோர் இவ்வறிவிப்பாணை வெளியாகும் தேதிக்கு முன்னதாக வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட முதல் தலைமுறை பட்டதாரி சான்றினை பெற்றவராக இருக்க வேண்டும்.
3. தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள்.
4. முன்னாள் இராணுவத்தினர்.
5. போரில் மரணமடைந்த அல்லது உடல் தகுதியை இழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினரில் இரண்டு நபர்கள் வரை.
6. ஆதரவற்ற விதவைகள் (Destitute Widows) அடிப்படையில் முன்னுரிமை கோருவோர் இவ்வறிவிப்பாணை வெளியாகும் தேதிக்கு முன்னதாக சார் ஆட்சியர் /வருவாய் கோட்ட அலுவலரால் வழங்கப்பட்ட சான்றினை பெற்றவராக இருக்க வேண்டும்

7. கலப்பு திருமண தம்பதியினர் (தம்பதியரில் ஒருவர் ஆதிராவிடர் அல்லது பழங்குடி இனத்தவராக இருக்க வேண்டும்)
8. மாற்றுத்திறனாளிகள் (மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 57–ல் உட்பிரிவு (1)ன்படி, அரசால் நியமிக்கப்பட்டுள்ள சான்றளிக்கும் அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்)

3. <u>தேர்வு செய்யும் முறை :–</u>

மாவட்ட வேலையாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் நாளேடுகளில் வெளியிடப்படும் அறிவிக்கை மூலம் பெறப்படும் விண்ணப்பங்களிலிருந்து இனசுழற்சி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு, வாசித்தல் மற்றும் எழுதுதல் திறனறிதல் தேர்வு, நேர்முகத் தேர்வு சான்றிதழ் சரிபார்ப்பு ஆகியவற்றில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நியமன இட ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி தேர்வு செய்யப்படுவர்.

4. <u>தடையின்மைச் சான்று :–</u>

அரசு பணியாளர்கள் தங்களது துறையிலிருந்து தடையின்மைச் சான்று பெற்று சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

5. <u>விண்ணப்பதாரர்களுக்கான நிபந்தனைகள் :–</u>

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன் அஞ்சல் உறையில் குறிப்பிட்ட பணியிடத்திற்கான விண்ணப்பம் என தெளிவாக குறிப்பிட்டு

   பொது மேலாளர் (பணி & நிர்வாகம்),
   தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ),
   எண். 19A. ருக்மணி லட்சுமிபதி சாலை, எழும்பூர்,
   சென்னை – 600008.

   என்ற முகவரிக்கு நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.
2. இவ்விளம்பரம் செய்யப்பட்ட தேதியில் இருந்து உரிய காலத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரீசிலினைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
3. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வி தகுதி மற்றும் மற்றும் அனைத்து சான்றிதழ்களின் நகல்களில் அரசிதழ் பதிவு பெற்ற

அலுவலரிடம் சான்றொப்பம் (Copy attested by the Gazetted officer) பெற்று அனுப்ப வேண்டும்.

4. விண்ணப்ப படிவத்தில் விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும் கேட்கப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாமலும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலே நிராகரிக்கப்படும்.
5. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பட்ட கல்வி தகுதி மற்றும் பிற தகுதிக்குறிய ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் நேர்முக தேர்வின் பொது கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.
6. நேர்முக தேர்வில் கலந்து கொள்பவருக்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.
7. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் உண்மைத் தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
8. மத்திய அல்லது மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள் உள்ளாட்சி மன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத்துறை கழகங்கள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ / தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது/பணிபுரிந்தது தொடர்பான ஆவணங்களை கோரும் போது விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.
9. விண்ணப்பதாரர் பெயரில் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருத்தல், கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை / தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல், கிளர்ச்சி அல்லது ஏதேனும் அரசியல் அமைப்பில் பங்கேற்பு பாராளுமன்ற/சட்டமன்ற தேர்தலில் பங்கேற்றல் ஆகியவை குறித்த சரியான மற்றும் உண்மையான தகவல்களை விண்ணப்பதாரர் தெரிவிக்க வேண்டும். தொடர்புடைய ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

10. இட ஒதுக்கீடு வயது, கல்வித்தகுதி மற்றும் இதர அடிப்படைத் தகுதிகள் குறித்து விண்ணப்பதாரர் அளித்த விபரங்கள் தவறு எனத் தெரியவரும் பட்சத்தில், அத்தகைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
11. தேர்வு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள், டிட்கோ மற்றும் அதன் கூட்டு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தேவைக்கேற்ப பணியிட மாறுதல் செய்யப்பட டிட்கோ –க்கு முழுமையான அதிகாரம் உண்டு.
12. விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என தெரியவரும் பட்சத்தில் அவரது விண்ணப்பத்தை எந்த கட்டத்திலும் நிராகரிக்கவோ அல்லது அவரின் தேர்வை ரத்து செய்யவோ டிட்கோ –க்கு முழுமையான அதிகாரம் உண்டு.
13. ஒரு விண்ணப்பதாரர் ஒரே ஒரு விண்ணப்பம் மட்டும் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
14. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். மேலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவார். தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித தகவலும் அனுப்பப்படமாட்டாது.
15. இந்த நிரந்தர பணியிடங்களுக்கான தேர்வில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அவை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) இணைய தளத்தில் தெரிவிக்கப்படும்.

6. **விண்ணப்பிக்க கடைசி நாள் :**

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் 3012.2025 காலை 10.00 மணி முதல் 30.01.2026 மாலை 5.00 மணி வரை அலுவலக வேலை நாட்களில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். காலம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.